**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜுன் மாதம் 20ம் நாள் செவ்வாய்க்கிழமை

இடை மனு எண். 3/2023-ன் அசல் வழக்கு எண். 274/2015

சம்மந்தன் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. கணபதி
2. சேகர்
3. தணிகைவேல்
4. புனிதவதி
5. தரணிபாய்
6. பாலமுருகன்
7. சக்திவேல்
8. தினகரன்
9. மணிகண்டன்
10. தமிழ்செல்வம்
11. மணிவண்ணன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 02.03.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. நெடுஞ்செழியன், அவர்கள் முன்னிலையாகியும், 1,2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.ஹரிகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுந்தரம், அவர்கள் ஆஜராகியும், 11ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.நந்தகுமார், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் 151 பிரிவின் கீழ் வா.சா.2 ன் சாட்சியத்தை நீக்கரவு செய்ய உத்தரவிடக் கோரி இம்மனு வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம்:-

இம்மனுவின் மனுதாரர் இவ்வழக்கில் வாதி, தனது தாயார் தனக்கு உயில் எழுதி வைத்த 27.07.1993 தேதியிட்ட உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பமிட்ட கிருஷ்டப்ப முதலியார் மகன் வெங்கடேசன் என்பவர் முதல் விசாரணை செய்யப்பட்டதாகவும், அவரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா உள்ள நிலையில் பிரதிவாதிகள் அவரை வாதி தரப்பில் சாட்சியம் அளிக்கக் கூடாது என்று மிரட்டியதால் வெங்கடேசனும் நீதிமன்றத்திற்கு வர மறுத்துவிட்டதாகவும், வாதி பலமுறை வெங்கடேசன் என்பவரை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென நேரடியாகவும் அலைபேசி மூலமும் அழைத்து அவர் எதிர்மனுதாரர்களின் மிரட்டலுக்கு அஞ்சி சாட்சியம் அளிக்க வர மறுத்துவிட்டார். எனவே வா.சா.2 சாட்சியத்தை நீக்கறவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

## 3. 2ம் எதிர்மனுதாரரால் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்கப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.

மனுதாரர் மனு பொய்யானது மோசவிதமானது, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுவில் கண்டுள்ள விவரங்கள் உண்மைக்கு மாறானது. எதிர்மனுதாரர் தரப்பில் வெங்கடேசன் என்பவரை எந்த காலத்திலும் சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வரக்கூடாது என கூறவில்லை. நீதிமன்றத்திற்கு வரக்கூடாது என்று மிரட்டவேண்டிய அவசியமும் இல்லை. வா.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இவ்வெதிர்மனுதாரர் தயாராக உள்ளார். வா.சா.2ஐ மனுதாரர் அழைத்தும் ஆஜராகவில்லை என்றால் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை கோரியிருக்கலாம். மாறாக வா.சா.2ன் சாட்சியத்தை நீக்கறவு செய்ய இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல. வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்தால்தான் உண்மை நிலவரம் நீதிமன்றத்திற்கு தெரிய வரும். மனுதாரர்

தரப்பில் வழக்கினை காலதாமதம் செய்துகொண்டு வா.சா.2ஐ குறுக்கு விசாரணைக்கு அழைத்தால் வர மறுப்பதாக பொய்யான காரணங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. 4 முதல் 10 வரையிலான மற்றும் 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் எதிருரையை ஏற்றுக்கொள்வதாக 4 முதல் 10 மற்றும் 11ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரரரின் மனு எதிர்மனுதாரர்களின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6. கற்றறிந்த மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், வா.சா.2ஐ குறுக்கு விசாரணைக்கு அழைத்து வர மறுத்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர்கள் மிரட்டுவதால் வர மறுத்ததாகவும் எனவே வா.சா.2ன் சாட்சியத்தை நீக்கறவு செய்யுமாறும் வாதிட்டார்.

7. கற்றறிந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், மேற்படி சங்கதிகளை மறுப்பு தெரிவித்து வா.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டு வழக்கு குறுக்கு விசாரக்கு நிலுவையில் உள்ளது. சாட்சியானவர் வர மறுத்தால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மாறாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

8. **<u>தீர்வு</u> :-**

இருதரப்பு மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனு வாதி தரப்பு சாட்சியான வா.சா.2ஐ சாட்சியம் அளிக்க கூடாது என எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

தரப்பில் மிரட்டுவதாகவும் எனவே வா.சா.2ன் சாட்சியத்தை நீக்கறவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும் சாட்சியை விசாரிக்க மனுதாரர்/வாதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எனவே இம்மனுவின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9. மேற்படி இவ்வழக்கு கோப்புகளை ஆராய்கையில் மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 10.12.2018 அன்று முதல் விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பின்னர் 19.12.2018 அன்று பிரதிவாதிகள் தரப்பில் முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னர் மனுதாரர்/வாதி தரப்பு மேற்கொண்டு சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து 07.01.2019, 09.01.2019, 23.01.2019, 30.01.2019, 06.02.2019, 15.02.2019, 18.02.2019, 22.02.2019 என வாய்தாக்கள் பெறப்பட்டு 27.02.2019 அன்று வா.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னர் 06.03.2019 அன்று வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் வாதி தரப்பில் பிராது திருத்தம் மேற்கொள்ள மனு தாக்கல் செய்யப்பட்டு கூடுதல் எதிருரை மற்றும் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட 08.02.2021 அன்று வழக்கு நிலுவையில் இருந்தபோது கட்டளை 1 விதி 10ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு 18.03.2021 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

10. பின்னர் பல வாய்தாக்கள் பெறப்பட்டு பிராது திருத்தம் வேண்டி மனு தாக்கல் செய்ய பல வாய்தாக்கள் வழங்கப்பட்டு 12.12.2022 அன்று பிராது திருத்த மனு அனுமதிக்கப்பட்டு பின்னர் பிராது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு கூடுதல் எதிர் வழக்குரைக்கு வழக்கு நிலுவையில் இருந்து கூடுதல் எழுவினா 07.02.2023 அன்று வனையப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்து 09.03.2023 அன்று வா.சா.1 கூடுதல் சாட்சியம் அளிக்கப்பட்டு வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, 12.04.2023 அன்று வா.சா.1 முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 18.04.2023 அன்று ஏற்கனவே வா.சா.2 முதன்மை சாட்சியம் அளிக்கப்பட்டிருந்த நிலையில்

குறுக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டு 25.04.2023 அன்று வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினம் மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து மனுதாரர்/வாதி தரப்பில் எதுவும் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியானவரை பிரதிவாதிகள் தரப்பில் மிரட்டுவதால் ஆஜராக மறுப்பதாக கூறப்பட்டுள்ளது.

11. மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்/வாதி இந்நீதிமன்றத்தில் சாட்சியை ஆஜர்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் நீதிமன்றத்தின் மூலம் எடுக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது. வழக்கு கோப்பினை ஆராய்கையில் மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்பது புலப்படுகிறது. மேலும் வழக்கில் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க கடமைப்பட்டவராகிறார். சாட்சியாக விசாரிக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில் குறுக்கு விசாரணைக்கு ஆஜர்படுத்த இயலவில்லை என்று மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்படும் சங்கதிகளுக்கு அனுசரணையாக சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தப் படவில்லை.

12. மேலும் ஏற்கனவே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியை நீக்கறவு செய்ய சட்டத்தில் எந்தவித வழிமுறையும் இல்லை. மேலும் சாட்சியத்தில், சாட்சியத்தின் தகுதி ஆய்வு குறித்து மட்டுமே நீதிமன்றம் தீர்மானிக்க இயலும். மேலும் ஒரு சாட்சியத்தை முழுமையான சாட்சியமாக பாவிக்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து வழக்கின் வாதத்தின்போது அது குறித்து தரப்பினர்கள் எடுத்துரைக்க வேண்டும். அது சமயம்தான் நீதிமன்றமும் முழுமையான சாட்சியமா என்பது குறித்து பரிசீலித்து அந்த சாட்சியத்தின் ஏற்புத் தன்மை குறித்து பரிசீலிக்க இயலும். மேலும் ஏற்கனவே நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தை நீக்கறவு செய்ய சட்டத்தில் எந்தவொரு வழிவகையும் இல்லை. மேலும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 151ன் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காகத்தான்

நீதிமன்றங்கள் தங்களது இயற்கையாக அமைந்த அதிகாரங்களை (Inherent power) பயன்படுத்தலாமே தவிர நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்த உபயோகிக்க முடியாது. எனவே மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லாத காரணத்தினால் இம்மனு அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும் மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்கள் அவரவர்களே செலவுத் தொகையை ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜுன் மாதம் 20ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஜ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவண ங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஜ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.